# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 112/மா/2025
நாள் 25.05.2026

க.சிவசங்கரன்,
சென்னை–600 019. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 1,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 019, திருவொற்றியூர், S.P.கோவில் 3வது தெரு, கதவு எண் 29/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. க. சிவசங்கரன் என்பவரின் 10.02.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.02.2025 அன்று பெறப்பட்டு 112/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–600 019, திருவொற்றியூர், S.P.கோவில் 3வது தெரு, கதவு எண் 29/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. க. சிவசங்கரன் என்பவர் 10.02.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

“மேற்படி முகவரியில் நான் என் பெற்றோர்கள், சகோதரர்களுடன் 45 ஆண்டுகளாக வசித்து வருகிறோம்.

மேற்படி எங்கள் வீட்டிற்கு எதிர்புறத்தில் (24/24, எஸ்.பி.கோயில், 3–வது தெரு, திருவொற்றியூர் முகவரியில்) திரு விக்னேஷ் என்பவரின் மனைவி திருமதி ஜனனி என்பவர் புதியதாக மனை வாங்கி கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறார். அந்த நபர் சாலையை ஆக்கிரமித்து தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றில் $2\frac{1}{2}$ அடி அகலம் x $17\frac{1}{2}$ நீளத்திற்கு, பக்கத்தில் உள்ள தெருவிளக்கு மின் கம்பத்தைத் தாண்டி சாலையை ஆக்கிரமித்து தளத்தை நீட்டி கட்டியுள்ளார் மற்றும் சாலையை ஆக்கிரமித்து படிக்கட்டுகள் கட்ட உள்ளார்.

மேலும் இந்த சாலை 17 அடி அகலமுள்ள குறுகிய சாலை, சாலையின் மேற்கு பகுதி நகர்களில் வசிக்கும் பொது மக்கள், மாணவ – மாணவிகள் மற்றும் உயர்ரக வாகனங்கள் பெரியார் நகர் மற்றும் திருவொற்றியூர் நெடுஞ்சாலையை இணைக்கின்ற முக்கிய சாலையாக இருப்பதால் போக்குவரத்து அதிகம் உள்ள சாலையாகும்.

உயர்ரக வாகனங்கள் இந்த குறுகிய சாலையில் வந்தால் எங்கள் வீட்டின் காம்பவுண்ட் சுவர் இடிக்கப்பட்டு விபத்து / உயிர்சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது.

இது சம்பந்தமாக நாங்கள் மாநகராட்சி மண்டலம்–1, 8வது வார்டு A.E. (துணை பொறியாளர்) அவர்களிடம் புகார் கொடுத்தோம். அவர் மேற்படி கட்டிடத்தை பார்வையிட்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, அரசாங்கம் நிர்ணயித்துள்ள கட்டிட விதிமுறைகளுக்கு மாறாக சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி எங்களுக்கும் பொது மக்களுக்கும் எந்தவித விபத்தும் உயிர்சேதமும் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 08.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் இதுவரை எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் தனது 14.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"மனுதாரர் திரு. க. சிவசங்கரன் அவர்களின் புகாரின் அடிப்படையில் கதவு எண் 24/24, S.P. கோயில் 3வது தெருவில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 31.01.2025 அன்று Form-01 Notice for Production of Documents தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையாக சாலையில் முன்புறம் அமைய இருந்த படிக்கட்டுகள் மற்றும் சாய்தளம் ஆகியவற்றை தடுத்து நிறுத்தப்பட்டது. S.P. கோயில் 3வது தெரு உட்புறசாலையாகும். இதில் வாகனங்கள் எவ்வித இடையூறுமின்றி சென்று வருகின்றன.

மேலும் முதல் தளத்தில் $2^1/_2$ அடி அகலத்தில் பால்கனி வெளிப்புறத்தில் அமைந்துள்ளது. இக்கட்டிடம் சம்பந்தமாக தற்போது 11.05.2026 அன்று Town Planning Enforcement Form-1 Notice for Production of Documents Notice No: I/No1//N008/00337/2026 Date 11.05.2026–ல் தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளரிடம் இருந்து உரிய விளக்கம் பெற்ற பின் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் உரிய தாக்கீதுகள் வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் தாக்கீது நகல்கள், புகைப்படம் நகல்கள் அனைத்தும் தங்களின் பார்வைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.''

5. மனுதாரர் 15.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மேற்படி முகவரியில் என் குடும்பத்தினருடன் வசித்து வருகிறேன்.

மேற்படி எங்கள் வீட்டிற்கு எதிர்புறத்தில் (24/24, எஸ்.பி.கோயில், 3–வது தெரு, திருவொற்றியூர் முகவரியில்) திரு விக்னேஷ் என்பவரின் மனைவி திருமதி ஜனனி என்பவர் புதியதாக மனை வாங்கி கட்டிடம் கட்டி உள்ளார். அந்த நபர் சாலையை ஆக்கிரமித்து தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றில் $2-^1/_2$ அடி அகலம் x $17-^1/_2$ நீளத்திற்கு, பக்கத்தில் உள்ள தெரு விளக்கு மின் கம்பத்தைத் தாண்டி சாலையை ஆக்கிரமித்து தளத்தை நீட்டி கட்டியுள்ளார் மற்றும் சாலையை ஆக்கிரமித்து படிக்கட்டுகள் கட்டி உள்ளார்.

மேலும் இந்த சாலை 17 அடி அகலமுள்ள குறுகிய சாலை, சாலையின் மேற்கு பகுதி நகர்களில் வசிக்கும் பொது மக்கள், மாணவ – மாணவிகள் மற்றும் உயர்ரக வாகனங்கள் பெரியார் நகர் மற்றும் திருவொற்றியூர் நெடுஞ்சாலையை இணைக்கின்ற முக்கிய சாலையாக இருப்பதால் போக்குவரத்து அதிகம் உள்ள சாலையாகும்.

எனவே, அரசு நிர்ணயித்துள்ள கட்டிட விதிமுறைகளுக்கு மாறாக சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி எங்களுக்கும் பொது மக்களுக்கும் எந்தவித விபத்தும்

உயிர்சேதமும் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் இளநிலை பொறியாளர் 15.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை திருவொற்றியூர் SP கோவில் 3வது தெரு, கதவு எண் 24/24 ல் அமைந்துள்ள கட்டிடம் களஆய்வு மேற்கொள்ளப்பட்டு 31.01.2025 நாளிட்ட Form 01 Notice for Production of Documents தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையாக சாலையின் முன்புறம் அமைய இருந்த படிக்கட்டுகள் மற்றும் சாய்தளம் ஆகியவற்றை தடுத்து நிறுத்தப்பட்டது. மேற்கண்ட சாலையானது உட்புறசாலையாகும் அதனால், வாகனங்கள் எவ்வித இடையூறுமின்றி சென்று வருகின்றன. மேலும் களஆய்வில் இக்கட்டிடத்தின் முதல் தளத்தில் 2-1/2 அடி அகலத்தில் பால்கனி வெளிபுறத்தில் அமைந்துள்ளதை கண்டறியப்பட்டு தற்போது 11.05.2026 அன்று Town Planning Enforcement Form 1 Notice for Production of documents notice dated 11.05.2026–ல் தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளரிடமிருந்து உரிய விளக்கம் பெற்ற பின் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் உரிய சட்டப்பூர்வ தாக்கீதுகள் வழங்கி தொடர்நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேம். மேலும் தாக்கீது நகல்கள், புகைப்பட நகல்கள் ஆகியவற்றை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை–19, திருவொற்றியூர், கதவு எண். 29/2 S.P.கோவில் தெரு, என்கிற முகவரியில் வசிக்கும் மனுதாரர் தன்னுடைய வீட்டிற்கு எதிர்புறத்தில் கதவு எண் 24/24–ல் என்ற முகவரியில் உள்ள திரு விக்னேஷ் என்பவரின் மனைவி திருமதி ஜனனி என்பவர் புதியதாக மனை வாங்கி கட்டப்பட்ட கட்டிடத்தின் தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகியவை $2^{1}/_{2}$ அடி அகலம் மற்றும் $17^{1}/_{2}$ அடி நீளத்தில் தெரு விளக்கு மின் கம்பத்தைத் தாண்டி சாலையை ஆக்கிரமித்து நீட்டியும் மற்றும் படிக்கட்டுகளும் கட்டியுள்ளார் என்பதும், 17 அடி அகலமுள்ள குறுகிய இச்சாலையானது மேற்கு பகுதி நகர்களில் வசிக்கும் பொது மக்கள், மாணவ–மாணவிகள் மற்றும் உயர்ரக வாகனங்கள் பெரியார் நகர் மற்றும் திருவொற்றியூர் நெடுஞ்சாலையை இணைக்கின்ற முக்கிய சாலையாக இருப்பதால் போக்குவரத்து அதிகம் உள்ள சாலையாகும் என்பதும், எனவே, அரசு நிர்ணயித்துள்ள கட்டிட விதிமுறைகளுக்கு மாறாக சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி தங்களுக்கும் பொது மக்களுக்கும் எந்தவித விபத்தும் உயிர்சேதமும் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை திருவொற்றியூர் SP கோவில் 3வது தெரு, கதவு எண் 24/24 ல் அமைந்துள்ள கட்டிடம் களஆய்வு மேற்கொள்ளப்பட்டு 31.01.2025 நாளிட்ட Form 01 Notice for Production of Documents தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையாக சாலையின் முன்புறம் அமைய இருந்த படிக்கட்டுகள் மற்றும் சாய்தளம் ஆகியவற்றை தடுத்து நிறுத்தப்பட்டது என்பதும், மேலும் இச்சாலை உட்புறசாலையாக இருப்பதால், வாகனங்கள் எவ்வித இடையூறுமின்றி சென்று வருகின்றன என்பதும், களஆய்வில் இக்கட்டிடத்தின் முதல் தளத்தில் $2^{1}/_{2}$ அடி அகலத்தில் பால்கனி வெளிபுறத்தில்

அமைந்துள்ளதை கண்டறியப்பட்டு 11.05.2026 அன்று Town Planning Enforcement Form 1 Notice for Production of documents notice தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதும், கட்டிட உரிமையாளரிடமிருந்து உரிய விளக்கம் பெற்ற பின் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் உரிய சட்டப்பூர்வ தாக்கீதுகள் வழங்கி தொடர்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலைபொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை திருவொற்றியூர் SP கோவில் 3வது தெரு, கதவு எண் 24/24 ல் அமைந்துள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் $2^1/_2$ அடி அகலத்தில் பால்கனி வெளிபுறத்தில் அமைந்துள்ளதை கண்டறியப்பட்டு Town Planning Enforcement Form 1 Notice for Production of documents notice–ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்றும், உரிய விளக்கம் பெற்ற பின் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் உரிய சட்டப்பூர்வ தாக்கீதுகள் வழங்கி தொடர்நடவடிக்கை எடுக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் இளநிலை பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட கட்டிடத்தில் விதிமீறல் இருப்பின் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் கீழும் மற்றும் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றங்கள் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படியும் உரிய சட்டபூர்வ நடவடிக்கையும் மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. க.சிவசங்கரன்,
29/2, S.P கோயில் 3வது தெரு,
திருவொற்றியூர்,சென்னை–600 019.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) உதவி ஆணையர், மண்டலம் 1,
பெருநகர சென்னை மாநகராட்சி
திருவொற்றியூர்,
சென்னை 600 019.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032